# அறுவடைக்கு பின் சூரியகாந்தியை உடனே விற்கவும்

இந்தியாவின் முக்கிய எண்ணெய் வித்து பயிர்களில் சூரியகாந்தி நான்காமிடம் வகிக்கிறது. நம் நாட்டில், சூரியகாந்தி 2014-15ல், 3.83 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 2.53 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இது 2013-14ல், சூரியகாந்தியின் சாகுபடி பரப்பை விட 24 சதவீதமும், உற்பத்தியை விட 36 சதவீதமும் குறைந்துள்ளது. கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு ஆகியவை சூரியகாந்தி உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களாகும். சூரியகாந்தி எண்ணெய் தென் மற்றும் மேற்கு மாநிலங்களில் அதிக அளவு நுகரப்படுகிறது. இந்தியாவில் மொத்த சூரியகாந்தி எண்ணெய் இறக்குமதியில் சென்னை துறைமுகத்தின் வழியாக 64.3 சதவீதம் இறக்குமதி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில், 2014-15ல் சூரியகாந்தி 0.07 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 0.05 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இதன் எண்ணெய் பிழிதிறன் 35 சதவீதம் ஆகும். தமிழ்நாட்டில், கரூர், தூத்துக்குடி, திருச்சி, திண்டுக்கல், விருதுநகர் மற்றும் அரியலூர் மாவட்டங்கள் மொத்த சூரியகாந்தி சாகுபடி பரப்பில் 81 சதவீதமும் உற்பத்தியில் 79 சதவீதமும் பங்களிக்கின்றன. தற்போது நல்ல தரமான சூரியகாந்தி விதையின் பண்ணை விலை குவிண்டாலுக்கு ரூ.3400 -3500 வரை வெள்ளகோவில் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் விற்கப்படுகிறது.

விவசாயிகள் சூரியகாந்தி விதைப்பிற்கான முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், கடந்த 13 ஆண்டுகளாக வெள்ளகோவில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய சூரியகாந்தி விதையின் விலையை ஆராய்ந்தது. சந்தை மற்றும் பொருளியல் ஆய்வுகளின் அடிப்படையில், சூரியகாந்தி விதையின் பண்ணை விலை, செப்டம்பர் - அக்டோபர், 2015ல் குவிண்டாலுக்கு ரூ.3500 -3600 என இருக்கும். எனவே விவசாயிகள் அறுவடை செய்த சூரியகாந்தியை விதையை உடனே விற்க பரிந்துரைக்கபடுகின்றனர்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள:</u>**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி -0422-2431405

**<u>தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>**

பேராசிரியர் மற்றும் தலைவர்
எண்ணெய் வித்துக்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி எண் - 0422-2450812